PRIMARY SCHOOL

.. SEMESTRAL ASSESSMENT 1

PRIMARY FIVE

Name : ____________________

Class : Pri 5 __________

Date : ________________

Total Tims : 1h 40 mins

90 Marks

INSTURCTIONS

Do not open the booklet until you are told to do so.

Follow aal instructions carefullu.

Answer all questions.

This paper consists of 13 printed pages.


134

www.testpapersfree.com

SA1 paper-4

வினா 2

கீழ்க்காணும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு, 100 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை / கதை எழுது. படத்தொடரின் அடியில் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களையும் சொற்றொடர்களையும் நீ இந்தக் கட்டுரை / கதை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.




| | |
|---|---|
| பெருவிரைவு ரயில் நிலையம் | தள்ளுவண்டியில் |
| மாடியிலிருந்து இறங்க | சிரமப்பட்டார் |
| குறும்புக்காரச் சிறுவன் | அவசரமாக ஓடியதால் |
| பழங்கள் சிதறின | வழிப்போக்கர் ஒருவர் |
| கவனித்தார் | உதவிக் கரம் நீட்டினார் |




www.testpapersfree.com

SA I

P5 SA1 தாள்- 4

பெயர்: ____________________ (5___)
தேதி: ____________________

90

Q1 முதல் Q23 வரையுள்ள வினாக்களுக்கு OAS விடைத்தாளில், சரியான விடையின் எண்ணுள்ள (1, 2, 3 அல்லது 4 ) நீள்வட்டத்தை நிழலிடு.

" அ " பிரிவு

A1 வேற்றுமை உருபு

Q1 முதல் Q6 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)

ஓர் ஊரில் முதியவர் ஒருவர் இருந்தார். அவர் ___(Q1)___ மிகவும் அன்பு உடையவர். ஒருநாள் அவர் ___(Q2)___ போனார். போகும் வழியில், அவர் ஒரு ___(Q3)___ கண்டார். அது தனியாகக் கத்திக் கொண்டு நின்றது. அவர் அந்தப் பூனைக்குட்டியை வீட்டிற்கு எடுத்துச் சென்றார். முதியவர் ஒரு ___(Q4)___ பால் ஊற்றி வைத்தார். பூனைக்குட்டி அதைக் குடித்தது. அதன் பசி அடங்கியது. பூனைக்குட்டி அவரை ___(Q5)___ பார்த்தது. அவர் அதைப் ___(Q6)___ பார்த்தார். அதன் பிறகு அவர் அந்தப் பூனைக்குட்டியை வளர்க்க ஆசைப்பட்டார்.

Q1. (1) மிருகங்களை
(2) மிருகங்களிடம்
(3) மிருகங்களில்
(4) மிருகங்களால் ( )

Q2. (1) கடைக்கு
(2) கடையில்
(3) கடையால்
(4) கடையை ( )

Q3. (1) பூனைக்குட்டிக்கு
(2) பூனைக்குட்டியால்
(3) பூனைக்குட்டியை
(4) பூனைக்குட்டியிடம் ( )



(அடுத்த பக்கம் பார்க்க)

136

www.testpapersfree.com

Q4. (1) கிண்ணத்தில்
(2) கிண்ணத்தால்
(3) கிண்ணத்தை
(4) கிண்ணத்திடம் ( )

Q5. (1) நன்றியை
(2) நன்றியால்
(3) நன்றியோடு
(4) நன்றிக்கு ( )

Q6. (1) பரிதாபத்தை
(2) பரிதாபத்துடன்
(3) பரிதாபத்தின்
(4) பரிதாபத்துடைய ( )

A2 செய்யுள் / பழமொழி

Q7 முதல் Q12 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)

Q7. ________________ ஆயிரம் பொன் தரும்.

(1) அடக்கம்
(2) அன்பு
(3) தன்னடக்கம்
(4) உழைப்பு ( )

Q8. செயற்கரிய ______________ பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

(1) பாடுபடுவார்
(2) ஊறுவார்
(3) செய்வார்
(4) முயல்வார் ( )



137

www.testpapersfree.com

Q9. எரிகிற விளக்கானாலும் _______________ வேண்டும்..

(1) தூண்டுகோல்
(2) அளவுகோல
(3) எழுதுகோல்
(4) ஊன்றுகோல் ( )

Q10. உப்பிட்டவரை உள்ளளவும் _______________.

(1) பினை
(2) வினை
(3) சினை
(4) நினை ( )

Q11. _______________ ஆகாததும் ஆகும்.

(1) பண்பிருந்தால்
(2) அன்பிருந்தால்
(3) குணமிருந்தால்
(4) செல்வமிருந்தால் ( )

Q12. அன்பிலார் எல்லாம் _______________ அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

(1) தமக்குரியர்
(2) எமக்குரியர்
(3) அதற்குரியர்
(4) செல்வருக்குரியர் ( )



www.testpapersfree.com

தெரிவுவிடைக் கருத்தறிதல்

பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படி :

ஒரு கஞ்சன் ஏராளமாய்ச் சொத்துச் சேர்த்து வைத்திருந்தான். நாளடைவில் அவற்றையெல்லாம் விற்றுத் தங்கக்கட்டிகளாக வாங்கினான். பின்னர் அவற்றை மூன்று பானைகளில் போட்டுப் பூமிக்குள் புதைத்து வைத்தான். பல ஆண்டுகள் சென்ற பின்னர், கஞ்சனுக்கு நோய் ஏற்பட்டது. அவன் இறக்கும் தருவாயில், தான் பூமியில் புதைத்து வைத்த மூன்று பானைகளைப்பற்றித் தன் மூன்று புதல்வர்களிடமும் கூறினான். அப்புதல்வர்களிடம் ஆளுக்கொரு பானையை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கூறிவிட்டுக் கஞ்சன் கண் மூடினான்.

மூன்று புதல்வர்களும், யாருக்கு எந்தப் பானை என்று சொல்லாமல் தந்தை இறந்துவிட்டாரே என்று எண்ணி வருந்தினர். அம்மூவரும் பானைகளை முன்பு பார்த்ததே இல்லை. ஆகவே அப்பானைகள் எப்படி இருக்கும் என்று அவர்களுக்குத் தெரியாது. பானைகள் பெரியதும், சிறியதுமாய் இருக்கும் என்று அவர்கள் ஐயமுற்றனர். அதனால், யாருக்குப் பெரிய பானை கிடைக்கவேண்டும் என்பதைப்பற்றி அவர்களுக்குள் விவாதம் ஆரம்பமாயிற்று.

மூத்தவன், தான் மூத்தவனாக இருப்பதால், தனக்கே பெரிய பானை கிடைக்கவேண்டும் என்று சொன்னான். இரண்டாம் மகனோ, தனக்கு நிலங்கள் ஏதும் இல்லாததால் தனக்கே பெரிய பானையைத் தரவேண்டும் என்று வாதாடினான். ஆனால் கடைசி மகனோ, தானே தன் தந்தையின் செல்லக் குழந்தையாக இருந்ததால் தனக்கே பெரிய பானையைக் கொடுக்கவேண்டும் என்று நியாயம் பேசினான்.

இந்தப் பேச்சு வளர்ந்து, அவர்களுக்குள் சண்டை முற்றியது. இறுதியில் மூவரும் ஒருவரை ஒருவர் பலமாகத் தாக்கிக் காயம் அடைந்தனர். பின்னர் அடிதடி ஓய்ந்ததும், புதைக்கப்பட்டிருந்த பானைகளை எடுக்க பூமியைத் தோண்டிப் பார்த்தபோது, மூன்று பானைகளுமே சமமாய் இருக்கக் கண்டனர். பானைகளின் உள்ளே இருந்த தங்கக்கட்டிகளும் ஒரே சமமான பங்குகளாகவே இருந்தன.

../P5.

13 முதல் 17 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் விடையின் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது.

13. கஞ்சனுக்குத் தங்கக்கட்டிகள் எவ்வாறு கிடைத்தன? ( )

(1) பூமிக்கடியிலிருந்து தோண்டி எடுத்ததால்
(2) தன் சொத்துகளை விற்று வாங்கியதால்
(3) மூன்று பானைகளில் கண்டெடுத்ததால்
(4) தான் கஞ்சத்தனமாகச் சேர்த்து வைத்ததால்

14. எதனால் அவன் தங்கக்கட்டிகளைத் தன் மகன்களுக்குக் கொடுக்க விரும்பினான்? ( )

(1) மகன்களின் மீதுள்ள பாசத்தினால்
(2) மகன்களிடம் சொத்து இல்லாததால்
(3) தனக்கு நோய் ஏற்பட்டதால்
(4) தான் இனி உயிர் வாழ போவதில்லை என்பதால்

15. புதல்வர்களுக்கு ஏற்பட்ட வருத்தத்திற்கான காரணம் என்ன? ( )

(1) தங்கக்கட்டிகளைப் பானைகளில் வைத்தது
(2) சொத்தைத் தங்கக்கட்டிகளாக மாற்றியது
(3) பானைகளைப் பூமிக்குள் புதைத்தது
(4) மூன்று பானைகளில் யாருக்கு எந்தப் பானை என்று சொல்லாதது

16. கடைசி மகன் தனக்கே பெரிய பானை கிடைக்க வேண்டும் என்பதற்காக அவன் கூறிய காரணம் என்ன? ( )

(1) தான் தந்தையின் செல்லப் பிள்ளை
(2) தான் உண்மையானவன்
(3) தனக்கு நிலங்கள் ஏதும் இல்லை
(4) தான் இளையவன்

17. மகன்கள் மூவரும் எப்படிப்பட்ட குணம் உடையவர்கள்? ( )

(1) பாசமுள்ளவர்கள்
(2) கோபக்காரர்கள்
(3) பேராசைக்காரர்கள்
(4) புத்திசாலிகள்

P5/



14C

www.testpapersfree.com

சொற்பொருள்

18 முதல் 20 வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து எழுது.

18. புதைத்து

1) திணித்து
2) மறைத்து
3) அடைத்து
4) நுழைத்து ( )

19. தருவாயில்

1) நாளில்
2) நேரத்தில்
3) இடத்தில்
4) சூழ்நிலையில் ( )

20. வருந்தினர்

1) நினைத்தனர்
2) திகைத்தனர்
3) குழம்பினர்
4) கவலைப்பட்டனர் ( )



141

www.testpapersfree.com

கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்

பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி:

# தமிழ்ப் புத்தாண்டாம் 'விய' ஆண்டை வரவேற்க

## சித்திரை மாலை கலைநிகழ்ச்சி

| | |
|---|---|
| நாள் | : 15/04/06 |
| நேரம் | : மதியம் 2 மணி முதல் மாலை 7 மணி வரை |
| இடம் | : பாரதியார் தமிழ்மொழி நிலையம் |
| ஏற்பாட்டாளர்கள் | : நிலையத்தின் பெற்றோர் ஆதரவுக் குழுவினர் |


தமிழ்ப் புத்தாண்டின் சிறப்பினை அறிய விரும்புகிறீர்களா?

அதை எவ்வாறு கொண்டாடுவது என்று தெரியவில்லையா?



இவை அனைத்தையும் நாடகத்தின் வழி

காண வாருங்கள்!



## மற்ற அங்கங்கள்

*சமையல் போட்டி*
இந்திய உணவு சமைக்க வேண்டும். தம்பதியராகப் பங்கெடுக்க வேண்டும்.

*பாரம்பரிய விளையாட்டுப் போட்டி*
ஐவர் அடங்கிய குழுவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மூவராவது இருக்க வேண்டும்.

வாருங்கள்! போட்டிகளில் பங்குபெற்றுப் பரிசுகளைப் பெற்றுச் செல்லுங்கள்!

தலா $2 நுழைவுச்சீட்டுகளைப் பெற பாரதியார் தமிழ்மொழி நிலையத்தின் அலுவலகத்தை இன்றே நாடுங்கள்!

P5.



142

www.testpapersfree.com

21 முதல் 23 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது.

21. கலைநிகழ்ச்சி நடத்தப்பட்டதன் நோக்கம் என்ன? ( )

1) தமிழ்ப் புத்தாண்டை வரவேற்க
2) தமிழ்ப் புத்தாண்டை வரவேற்பதோடு குடும்ப பிணைப்பை ஏற்படுத்த
3) தமிழ்மொழி நிலையத்திற்கு நிதி திரட்ட
4) தமிழ்ப் பாரம்பரியத்தை வளர்க்க

22. தமிழ்ப் புத்தாண்டைக் கொண்டாடுவது எப்படி என்று அறிய என்ன செய்திருக்க வேண்டும்? ( )

1) கலைநிகழ்ச்சியில் கலந்துகொண்டிருக்க வேண்டும்
2) பெற்றோர் ஆதரவுக் குழுவில் சேரந்திருக்க வேண்டும்
3) இந்நிகழ்ச்சியின் நாடகத்தைக் கண்டிருக்க வேண்டும்
4) நுழைவுச்சீட்டுகளை வாங்கியிருக்க வேண்டும்

23. சமையல் போட்டியில் கலந்துகொள்ள யார் தகுதி பெறுவர்? ( )

1) நுழைவுச்சீட்டு வைத்திருந்தவர்
2) கணவனும் மனைவியும்
3) ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மூவர்
4) சமைக்கத் தெரிந்தவர்கள்



143

www.testpapersfree.com

Q24 முதல் Q41 வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை இந்தப் புத்தகத்தில் எழுது

'ஆ' பிரிவு

**C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்**

பின்வரும் பகுதியில் Q24 முதல் Q28 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (10 மதிப்பெண்கள்)

| | |
|---|---|
| Q24. அன்று பொங்கல் திருநாள். என் தாயார் எங்கள் வீட்டு வாசலில் அழகிய __________ ஒன்றை வரைந்தார். | Q24 ( ) |
| Q25. நான் விளையாடிக்கொண்டிருந்த சமயத்தில் தேனீ என்னைக் கொட்டிவிட்டது. வலி ________ முடியாமல் நான் வாய்விட்டு அலறினேன். | Q25 ( ) |
| Q26. என் தந்தை மருத்துவராக __________ செய்கிறார். அவர் ஓய்வு நேரங்களில் எங்களுக்கு ஆட கற்றுத் தருவார். | Q26 ( ) |
| Q27. பாட்டி சமையலறையில் பலவகையான உணவுகளைத் தயாரித்துக்கொண்டிருந்தார். அதன் ________ வீடெங்கும் பரவியது. | Q27 ( ) |
| Q28. தினமும் காலையில் அதிகமாக மழை பெய்கிறது. இவ்வாறு தொடர்ந்து மழை பெய்தால் பல சாலைகளில் ________ ஏற்படும். | Q28 ( ) |

| | |
|---|---|
| (1) பொறுக்க | (2) பனி |
| (3) மனம் | (4) கோலம் |
| (5) பணி | (6) மணம் |
| (7) வெல்லம் | (8) பொருக்க |
| (9) கோளம் | (10) வெள்ளம் |



www.testpapersfree.com

## D7 முன்னுணர்வுக் கருத்தறிதல்

பின்வரும் பகுதியில் Q29 முதல் Q35 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் ஏற்ற சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (14 மதிப்பெண்கள்)

மன்னர் அக்பருடைய பிறந்தநாள் விழா ஏற்பாடுகள் சிறப்பாக நடைபெற்றன. Q29. __________ தினம், ஏழை, உடல் ஊனமுற்றோர் மற்றும் கதியற்ற முதியோர்களுக்கு அறுசுவை உணவு அளிக்க அவர் விரும்பினார். அந்தச் செய்தியைத் தண்டோரா போட்டு நாடு முழுவதும் Q30. __________ செய்தார். அக்பரின் பிறந்த நாளன்று அரண்மனையை ஒட்டியிருந்த Q31.__________ பெரிய பந்தல் போடப்பட்டிருந்தது. சாப்பாட்டு நேரத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் Q32.__________ சாப்பிடுவதற்காக வந்திருந்தார்கள். அக்கூட்டத்தில் ஏழை, உடல் குறையுள்ளோரும் முதியோரும் குறைவாக இருந்தனர். ஆனால், Q33.__________ வாய்ப்புள்ளவர்கள் மற்றும் உடல் குறையில்லாதோர்தான் அதிகம் இருந்தனர். சுவையான உணவு Q34.__________ கிடைக்கிறது என்பதற்காகவே அவர்கள் அங்கே வந்திருந்தார்கள். இது அக்பருக்கு Q35.__________ அளித்தது. அவர் இவர்களையெல்லாம் விரட்டிவிட்டு ஏழை எளிய மக்களுக்கு உணவளிக்கப் பீர்பாலிடம் யோசனை கேட்டார்.

(தழுவல் : 1997 வளர்தமிழ் பயிற்சிநூல்)

Q29. (      )
Q30. (      )
Q31. (      )
Q32. (      )
Q33. (      )
Q34. (      )
Q35. (      )

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | வேதனை | 2. | வசதி | 3. | தெரிவிக்க |
| 4. | விருந்து | 5. | இலவசமாக | 6 | அன்றைய |
| 7. | மைதானத்தில் | 8. | பரிமாரப்பட்டு | 9. | தங்கியிருந்த |
| 10. | மகிழ்ச்சி | 11. | ஏற்பாடு | 12. | தொலைவில் |



(அடுத்த பக்கம் பார்க்க)

www.testpapersfree.com

சுயவிடைக் கருத்தறிதல் (26 ம)

பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து அதனடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுது

அரசன் ஒருவனுக்குத் தன் பகைவர்களை அழித்திட முடியுமா என்ற ஐயம் மனத்தில் தோன்றியது. அவன் தன் அமைச்சர்கள் அனைவரிஅயும் கூப்பிட்டு, "நம் பகை அரசர்களை அழிக்க ஏதேனும் வழி உண்டா?" என்று கேட்டான். அதற்கு அமைச்சர்களில் ஒருவர், "அரசே! பகை அரசர்கள் நம்மை விட வல்லமை உடையவர்கள். என்ன சூழ்ச்சி செய்தாலும் அவர்களை அழிக்க இயலும் என்று நான் கருதவில்லை", என்றார். மற்ற அமைச்சர்களும் அவர் கூற்றை ஆமோதித்தனர். அரசன் தானே பகைவர்களை அழிக்கத் திட்டமிட்டான்.

மறுநாளே பகை அரசர்களுக்குத் தூதுவர்கள் ஓலை எடுத்துச் சென்றனர். அதில் என்ன எழுதியிருந்தது என்று அமைச்சர்களுக்குத் தெரியவில்லை. ஓரிரு தினங்களில் பகை அரசர்கள் அந்நாட்டிற்கு வருகை அளித்தனர். அரசன் அவர்களைச் சீரும் சிறப்புமாக வரவேற்றான்.

அமைச்சர்களோ தம் அரசன், பகை அரசர்களை இரவோடு இரவாகக் கொலை செய்து விட்டால் நாட்டில் பெரும் பழி ஏற்பட்டுவிடும் என்று எண்ணி மனம் கலங்கினார்கள்.

பகை அமைச்சர்களுக்கு நாள்தோறும் சிறப்பாக விருந்து நடந்தது. பத்து நாட்கள் தங்கிய பின்னர் பகை அரசர்கள் விடை பெற வந்தனர். வந்தவர்களுக்கு விலையுர்ந்த பரிசுகளை வழங்கி அவர்களை வழி அனுப்பினான். தலைமை அமைச்சர், அரசனிடம் சென்று, 'பகை அரசர்களை ஒழிக்கப் போவதாகக் கூறினீர்களே?' என்று தயக்கத்துடன் கேட்டார்.

'நான் அவர்களை ஒழித்து விட்டேனே! என்று திண்ணமாகக் கூறினான் அரசன். 'நீங்கள் அவர்களுக்குச் சீரும் சிறப்பும் செய்து அனுப்பிவிட்டு அவர்களை ஒழித்து விட்டதாகக் கூறுகிறீர்களே! எப்படி?' என்று மற்றோர் அமைச்சர் கேட்டார்.

"அந்த அரசர்கள் அனைவரும் இனி நம் பகைவர்கள் அல்லர். நண்பர்கள்', என்று அரசன் கூறினான். 'அவர்களை நண்பர்களாக்கிக் கொண்டதன் மூலம் பகைவர்களை அழித்துவிட்டேன்', என்று பதில் கூறினான். அரசனின் திறமையை வியந்து அமைச்சர்கள் அவனை மெச்சினார்கள்.

Q36 முதல் Q41 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. (20)

36. அரசனுக்குத் தோன்றிய சந்தேகம் என்ன? (2)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

37. பகை வேந்தர்களை அழிப்பது ஏன் சிரமமாக உள்ளது? (3)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

38. பகை அரசர்கள் ஏன் அந்நாட்டுக்கு வருகை புரிந்தனர்? (3)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________



147

www.testpapersfree.com

39. அமைச்சர்கள் கவலை கொள்ளக் காரணம் என்ன? (4)

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

40. அரசன் பகை அரசர்களைக் கொல்லாமல் இருக்க அமைச்சர்கள் என்ன செய்திருப்பார்கள்? (5)

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

41. மன்னர் பகைவர்களை எவ்வாறு ஒழித்தான்? (3)

________________________________________

________________________________________

________________________________________

________________________________________



148

www.testpapersfree.com

Primary - 5 SA - 1 Paper - 4

ஓர் ஊரில் முதியவர் ஒருவர்.......

1. 2 2. 1 3. 3 4. 1 5. 3 6. 2

7. 1 8. 3 9. 1 10. 4 11. 2 12. 1

13. 2 14. 4 15. 4 16. 1 17. 3

18. 2 19. 2 20. 4

21. 1 22. 3 23. 2

24. 4 25. 1 26. 5 27. 6 28. 10

29. 6 30. 3 31. 7 32. 4 33. 2 34. 5 35. 1

36. தன் பகைவரை அழித்திட முடியுமா என்பதே அரசனுக்குத் தோன்றிய சந்தேகம்.

37. பகை வேந்தர்கள் அவர்களை விட் வல்லமை வாய்ந்தவர்களாக இருந்ததால் அவர்களை அழிப்பது சிரமமாக உள்ளது.

38. பகை அரசர்களுக்கு ஓலை மூலம் அரசர் அழைப்பு விடுத்திருந்ததால் அவர்கள் அந்நாட்டுக்கு வருகை புரிந்தனர்.

39. அரசன் பகை அரசர்களை இரவோடிரவாகக் கொலை செய்து விட்டால் நாட்டில் பெரும் பழி உண்டாகிவிடும் என்றெண்ணமே அமைச்சர்கள் கவலை கொள்ளக் காரணமாகும்.

40. அரசன் பகை அரசர்களைக் கொல்லாமலிருக்க அமைச்சர்கள் அவனைச் சந்தித்து அவனைத் தவ்று இழைப்பதிலிருந்தும் தடுத்திருப்பார்கள்.

41. மன்னன் பகைவர்களை உபசரித்து, விருந்தளித்து, விலையுயர்ந்த பரிசுகளை வழங்கி பகைவர்களையும் நண்பர்களாக்கிக் கொண்டதன் மூலம் பகைவர்களை ஒழித்தான்.



www.testpapersfree.com